## தமிழ் இணையக் கல்விக்கழகம் –TAMIL VIRTUAL ACADEMY

## ழகரம் – நிலை – 4Lakaram – Nilai – 4

### நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)

**நேரம் – 3.00 மணி நேரம்** **மதிப்பெண் 75**

### பகுதி – அ
### படித்தல் திறன்

**I. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியினைப் படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

***Read the passage and answer the questions that follow:*** **(5x 1= 5)**

தொடர்வண்டி ஐந்து மணிநேரம் தாமதம். இரவு ஏழு மணிக்கு ஊர் வந்து சேரவேண்டிய வண்டி, நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குத்ததான் வந்தது. களைப்பு ஒருபக்கம், எரிச்சல் மறுபக்கம். வீடு நாலு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. எப்படி வீட்டிற்குப் போவது என்று தவித்தான் சரவணன். அப்போது அதே ஊரைச் சேர்ந்த மாட்டுவண்டிக்காரர் ஒருவர் இருப்பதைப் பார்த்ததான். அவரருகே சென்றான். தன் வீட்டு முகவரியைக் கூறிஅழைத்துச் செல்ல முடியுமா என்று கேட்டான். சாலை கொஞ்சம் மேடுபள்ளமா இருக்கும், இருட்டு வேறே, பரவாயில்லையா தம்பி என்றார் வண்டிக்காரர். பரவாயில்ல, பரவாயில்ல. நான் விடிவதற்குள் வீட்டுக்குப் போகவேண்டும் என்று கூறினான் சரவணன். சரி, ஏறி உட்ககாருங்க தம்பி என்றவாறே மாடுகளைத் தட்டினார் அந்த வண்டிக்ககாரர். பாவம், இந்த வண்டிக்காரர். இரவு நேரம் என்று கூடப் பார்க்காம நமக்காக வண்டி ஓட்டுகிறார். கொஞ்சம் அதிகமாகவே பணம் கொடுக்கலாம் என்று நினைத்துக்கொண்டான் சரவணன். வீட்டுக்குப் பாதுகாப்பாக வந்து சேர்ந்ததும் அவன் மனம் மாறியது. வண்டிக்காரர் அவனது கடமையைத்தானே செய்தான். அதற்கு எதற்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று எண்ணியவாறே, இந்தாப்பா, நூறு ரூபாய் என்று அவன் கையில் திணித்துவிட்டுத் திரும்பிப் பார்க்ககாமல் சென்றான் சரவணன்

வினாக்கள்

1. தொடர்வண்டியில் பயணம் செய்தவரின் பெயர் என்ன?
2. தொடர்வண்டி எத்தனை மணிநேரம் தாமதமாக வந்தது?
3. சரவணன் எந்த வண்டியில் வீட்டிற்குச் சென்றான்?
4. வண்டிக்காரரைப் பார்த்துச் சரவணன் ஏன் இரக்கப்பட்டான்?
5. கதையில் குறிப்பிடப்பட்ட இரு கதைமாந்தருள் இரக்கக்குணம் கொண்டவர் யார்? உங்கள் கருத்தைக் கூறுக.

## பகுதி ஆ
## மொழிபெயர்ப்புத் திறன்

**II. கீழ்க்காணும் தமிழ்ப் பத்தியினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும்:–**
***Translate the following Tamil passage into English:*** **(1x5=5)**

சமூக முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். இக்கால இளைஞர்களே, எதிர்காலச் சமூகத்தின் அடித்தளமாக உள்ளனர். எனவே, இளைஞர்கள் தனிமனித ஒழுக்கத்ததைக் கட்டடாயம் கடைப்பிடிக்க வேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, பொதுநலம் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்

**III. கீழ்க்காணும் ஆங்கிலப் பத்தியினைத் தமிழில் மொழிபெயர்க்கவும்:–**
***Translate the following English passage into Tamil:*** **(1x5=5)**

Thamirabarani River originates from the Pothigai hills of western ghats and flows through Tirunelveli and Thoothukudi districts of Tamilnadu.

## பகுதி – இ
## இலக்கணப்பகுதி

**IV. கீழ்க்காணும் தொடர்களைப் படித்து, அட்டவணையை நிரப்புக :–**
***(Read the following series and fill in the table):*** **(1x 5= 5)**

1. **புனைய ஓவியம்** போல் நின்றாள்.
2. மன்னனைப் **பாடிய புலவர்** பரிசில் பெற்றுச் சென்றார்.
3. **வற்றாத நிலம்** நிறைந்த தமிழ்நாடு.
4. உழைக்கும் மக்கள் **தேடிய செல்வமே** செல்வம் எனப்படும்.
5. **நதி இல்லா** நாடு வளத்தினில் சிறக்காது.

| உடன்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சம் | ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம் | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
|---|---|---|
| | | |
| | | |

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
*Answer any Five questions* **(5 x 2= 10)**

1. பொதுமொழி என்றால் என்ன?
2. வேற்றுமை உருபு எத்தனை வகைப்படும்?
3. மழலையைக் குறிக்கும் பல சொல்லை எழுதுக.
4. வினைமுற்று எத்தனை வகைப்படும்?
5. 'ஊசியும் நூலும்போல' என்ற தொடருக்கான உவமைத்தொடரைக் கூறுக.
6. 'குமார் மரத்தை வெட்டியது' என்ற தொடரில் உள்ள வழு என்ன?
7. செயப்படுபொருள் குன்றிய வினை என்றால் என்ன?

**பகுதி – ஈ**

**பாடப்பகுதி**

**VI. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக:–**
*Answer all questions in a word /Sentence.* **(5 x 1=5)**

1. பாஞ்சலி சபதம் என்னும் நூலை இயற்றியவர் யார்?
2. முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் யார்?
3. NLP என்பதன் விரிவாக்கம் யாது?
4. புவிநாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
5. தமிழில் முதன்முதலில் ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் யார்?

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக:–**
*Answer any Five questions in three lines each.* **(5 x 2= 10)**

1. பொருநை ஆற்றுக்கு வழங்கும் வேறு பெயர்களை எழுதுக.
2. உடல் உறுப்புத்தானம் என்றால் என்ன?
3. மட்கும் பொருள் விளக்குக
4. புவி வெப்பமடைதலால் ஏற்படும் தீங்குகள் யாவை?
5. வான்காரி மாத்தாய் தோற்றுவித்த திட்டத்தையும் பணிகளையும் குறிப்பிடுக.
6. நிறைகோலும் ஆசிரியரும் குறித்து நன்னூல் கூறுவது யாது?

**VIII. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:–**
*Answer any one of the following questions in essay format:* **(1x 10 = 10)**

1. அகழாய்வு குறித்துக் கட்டுரை எழுதுக.
2. கல்வியாளர்கள் பற்றி விளக்கி எழுதுக.
3. தொழிற்புரட்சியால் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து விளக்குக.

**பகுதி – உ**

**செய்யுள் பகுதி**

**IX. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:-**
*Answer any Five questions .* (5 x 2= 10)

1. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' இப்பாடலின் ஆசிரியர் யார்?
2. 'நாக்கிலே இருக்கிறது நன்மையும் தீமையும்' என்று கூறுவது எது?
3. கண்ணிற்கு அணிகலன் என்று வள்ளுவர் சுட்டுவது என்ன?
4. நல்குடிப் பிறந்தார் பற்றி ஔவையார் கூறுவது யாது?
5. 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' எனக் கூறியவர் யார்?
6. நாலடியார் கூறும் நற்செயல் செய்ய வேண்டிய காலத்தினை விளக்குக.

**பகுதி – ஊ**

**படைபாற்றல் பகுதி**

**X. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:-**
*Write an essay any one of the following questions* (1x 10= 10)

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தினைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.



2. பண்டைத் தமிழர்களின் தொழில்கள் குறித்து எழுதுக.
3. இணையத்தின் பயன்பாடுகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

*****